1972 ஆகஸ்ட் 18]

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, இதெல்லாம் திரு. கே. எல். ராவ் அவர்கள் பதில் சொல்ல வேண்டிய கேள்விகள்.

அவிநாசி பேருந்து நிலையம்

* 169. **வினா—திரு. தி. ஓ. பெரியசாமி :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், அவிநாசி வட்டம், அவிநாசி பேரூராட்சி மன்றப் பேருந்து நிலையத்தை விரிவுபடுத்த இட வசதியைப் பெருக்க அவிநாசி பயணிகள் விடுதியைச் சார்ந்த இடத்தில், ஒரு பகுதியை ஒதுக்கித் தருமாறு அவிநாசி பேரூராட்சி மன்றத்திடமிருந்து அண்மையில் கோரிக்கை ஏதேனும் வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) ஆம்.

(இ) இது அரசின் பரிசீலனையில் இருக்கிறது

சோத்துப்புலிவாத்தலை வாய்க்கால்.

* 170 **வினா—திரு. சி. இராமநாதன் :** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி வட்டத்தில், சிலட்டூர் வட்டார ஏரிகளுக்குப் பயன்படும் சோத்துப்புலிவாத்தலை திட்டத்தை நிறைவேற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** அறந்தாங்கி வட்டத்தில் சிலட்டூர் ஏரிக்குப் பயன்படும் சோத்துப்புலிவாத்தலை வாய்க்காலைச் சீரமைக்க வேண்டுமென்றும் ஒரு கோரிக்கை சம்பந்தப்பட்ட கிராமத்தார்களிடமிருந்து வரப்பெற்றுள்ளது. இக் கோரிக்கை தல அதிகாரிகளின் பரிசீலனையில் உள்ளது.

சட்டமன்றம் LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS